**ஏப்ரல் – 30**

**"நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும் படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்." - 1பேது 2 : 9**

இந்த ஒளியினிடத்திற்கு நாம் அழைக்கப்பட்டிருப்பதின் உண்மையான நோக்கமே நாம் அந்த ஒளியைப் பிரகாசிக்கச் செய்ய வேண்டுமென்பதே. நாம் அந்த ஒளியைப் பிரகாசிக்கச் செய்யாவிட்டால், நாம் அதற்கு அபாத்திரமாயிருக்கிறோம். அந்தப் பொக்கிஷம் நம்மிலிருந்து எடுக்கப்படும். அப்பொழுது நாம் அந்தகாரத்தில் விடப்படுவோம். உண்மையாகவே நாம் அந்த ஒளியைப் பெற்றிருந்து, நம்மை முற்றிலுமாகத் தேவனுக்குப் பிரதிஷ்டை செய்திருந்தோமானால், அந்தகாரத்தினின்று என்னை வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்க நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று நம்மையே கேட்போமாக. சமீபத்திலும், தூரத்திலிருக்கிற என் பிறரிடத்திற்கு இந்தச் செய்திகளை அறிவிக்கப் போய்க் கொண்டிருக்கிறேனா?

எனது எல்லா மீட்கப்பட்ட சக்திகளும், எனது எல்லா நினைவுகளும், வார்த்தைகளும், செய்கைகளும், எனது எல்லா நாட்களும், எனது எல்லா நேரங்களும், எல்லாம் யேசுவுக்காக எல்லாம் யேசுவுக்காக நான் இருக்கிறேன் என்று நான் உறுதிபடுத்த முடியுமா? **-Z ’03, 165 (R 3199).**

அவருடைய இராஜ்யத்தில் பங்கு கொள்ளுகிறவர்களாவதற்குத் தேவனுடைய ஜனங்கள், மனுஷ ஜாதியின் மற்றவர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் மற்றவர்களிலிருந்து தனித்தவர்களும், கர்த்தருக்குப் பிரதிஷ்டை பண்ணினதுமான ஒரு ஜனம். முற்றிலும் கர்த்தருடைய ஒரு உடமை. தேவனுடைய ஞானத்தையும், நீதியையும், அன்பையும், வல்லமையையும், வார்த்தைகளிலும், கிரியைகளிலும் அறிவிக்கிறதினால், அவர்கள் அவர் மீது புகழைப் பிரதிபலிக்கச் செய்யலாமென்ற அப்படிப்பட்ட ஒரு தேவ தீர்ப்புக்கு, அப்படிப்பட்ட ஒரு உயர்ந்த சலுகைக்கு அவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். இதுதான் நமது அழைப்பாயிருக்கிறதினால், நம்முடைய சோதனைகளாலும், மாதிரியினாலும் அவருடைய குணங்களை மற்றவர்களுக்கு முன்பாகக் கை உயர்த்துவோமாக. **-P ’36, 48.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யாத் 19:5,6; உபா 7:6; 10:15; தானி 7:18,22,27; ஏசா 61:6; 66:21; சகரி 6:12,13; 1பேது 1:2; 2:5; எபே 1:4,5; மத் 5:16; யோவா 15:8; தீத்து 2:14; அப் 20:28; ரோம 8:23-25; வெளி 1:6; 5:10; 20:6; யோவா 17:9.

**கோபுர வாசிப்பு : Z ’14, 151 (R 5460).**

**வினாக்கள் :** இந்த வார வசனம் என்னை எவ்வாறு பாதித்தது? எந்தெந்த சந்தர்ப்பங்களில்? ஏற்பட்ட பலன் என்ன?